விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | வைகாசி: 22 | துல் ஹஃதா: பிறை: 11 | இதழ்: 113

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 5-06-1990

## புலிகளோடு அரசாங்கம் மோதத் தயாரில்லை!

### ஜனாதிபதி வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ விடுதலைப் புலிகளோடு அரசாங்கம் மோதத் தயாரில்லை. அந்த நோக்கமும் அரசாங்கத்திற்கு இல்லை''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி உறுதியளித்ததாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். (8-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகர் பாதுகாப்பு நிலைமை:

## புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

''மட்டக்களப்பு பாதுகாப்பு பிரச்சனை பற்றி அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இணக்கம் காணப்பட்டது''.

இவ்வாறு கோண்டாவில் விடுதலைப் புலிகளின் யாழ்
(8ம் பக்கம் பார்க்க)

## ★ வடக்கு - கிழக்கு மாகாணசபையை கலைப்பதற்கு

# அரசாங்கம் ஒருவாரத்தில் பாராளுமன்றில் புதிய மசோதா ஒன்றை சமர்ப்பிக்கும்!

## மூன்று மாதங்களுக்குள் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படும்

(நமது அலுவலக நிருபர் மணிசேகரன்)

''மாகாண சபையைக் கலைப்பதற்கான புதிய மசோதா ஒன்று, அடுத்த வாரமளவில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பின்னர் மூன்று மாதங்களுக்குள் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படும்.''

விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களுக்கும், அரசாங்கத்திற்குமிடையில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது அரசாங்கத்தினால் மேற்கண்ட உறுதிமொழிகள் வழங்கப்பட்டன என விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், நேற்றிரவு கோண்டாவில் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்:

அவர் மேலும் தகவல் தெரிவித்ததாவது; ''ஏற்கனவே அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தின்படி ஒரு மாகாண சபையை முதலமைச்சர் கலைத்துக்கொள்ளலாம் அல்லது 5 வருடங்களின் பின்பு தானாகவே கலையக்கூடியதாகச் சட்டம் அமைந்திருக்கிறது. இந்தச் சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்கு அரசாங்கம் புதிய மசோதாவாக இந்த மாகாண சபையைக் கலைக்கும் மசோதாவைக் கொண்டுவர இருக்கிறது.
(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழத்தில் இப்போது அமைதி நிலவுகிறது

### எவரும் தேர்தலில் போட்டியிடலாம்

### யோகி பி. பி. ஸிக்கு பேட்டி

(லண்டன்)

தமிழீழத்தில் இப்போது அமைதி நிலவுகின்றது. யாரும் வந்து தேர்தலில் போட்டியிடலாம். நாம் யாரையும் தடுக்கப் போவதில்லை. ஆயுதப் பயமுறுத்தல் அற்ற சூழ்நிலையை உருவாக்கி தேர்தலை நேர்மையான முறையில் நடாத்துவதற்கு நாம் முழுமையாக உதவுவோம். அத்தோடு சர்வதேச பார்வையாளரும் வந்து தேர்தல் நடப்பதை அவதானிக்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செய
(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக

## கம்பியூட்டர் விஞ்ஞானத்துறை காடிவ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகக் கம்பியூட்டர் விஞ்ஞானத்துறை, காடிவ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 4 கோடி ரூபா பெறுமதியான உதவிகள் கிடைக்கவிருக்கிறது.

இத்திட்டம் பற்றி மேலும் பேச்சுவார்த்தைகள் நடாத்த பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இரு அங்கத்தவர்கள் கொண்ட குழு ஒன்று வெகுவிரைவில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகக் கம்பியூட்டர் பிரிவு இயக்குநர் பேராசிரியர் குமாரவடிவேல், கடந்த பெப்ரவரி மாதம பல
(8-ம் பக்கம் பார்க்க)

## சம்பளம் இடைநிறுத்தப்படும்

(கொழும்பு)

இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் ஆசிரியர்கள் அதனை ஏற்க மறுக்கும் பட்சத்தில் அவர்களது சம்பளம் இடைநிறுத்தம் செய்யப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் திரு. அத்துலத் முதலி அறிவித்துள்ளார்.

## படகு பரிசோதனை

## 7-ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய உற்சவத்தின் போது யாத்திரிகர்களைக் கொண்டு செல்லும் கடற் சேவையில் தமது படகுகளை ஈடுபடுத்த விரும்பும் மோட்டார்
(8-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும்

## பௌர்ணமிக் கலைவிழா!

(யாழ்ப்பாணம்)

எமது மண்ணிலுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் மக்களிடையே கலையுணர்வை வளர்க்கும் முகமாகவும் யாழ். மாநகராட்சி மன்றம் மீண்டும் மாதாந்த பௌர்ணமி கலைவிழாவை எதிர்வரும் 7-ம் திகதி நடாத்தவிருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில், இன்றைய சூழ்நிலையில் இந்த பௌர்ணமிக் கலைவிழாவை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று பல கலை இலக்கிய நண்பர்கள் கேட்டுக் கொண்டதை தொடர்ந்து இதுநடைபெறவிருக்கிறது.

யாழ். திறந்தவெளியரங்கை திருத்தி அமைத்த பின் இந்த கலைவிழாவை செய்ய
(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் பயன்படுத்தப்படாத

## அரச காணிகளை விவசாயத் தேவைக்கு கொண்டுவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான, பயன்படுத்துவதற்கு உகந்த அதேசமயம், பாவனையற்றுக்கிடக்கும் நிலங்களை விவசாயம் மற்றும் வேறுவகையான உச்சப் பயன்பாட்டுக்கு கொண்டுவர யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப இம் மாவட்டத்தில் காணிப் பற்றாக்குறை காணப்படுவதால் அதன் அயல் மாவட்டங்களில் இருந்து காணிகளைப் பெறுவது சம்பந்தமாக எதிர்வரும் 8ந் திகதி மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அரச அதிபர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டில் இது பற்றி யாழ். அரச
(8ம் பக்கம் பார்க்க)

## கடத்தல் பொருள்களுடன்

## 5 பேர் கடற்படையினரிடம் சரணடைந்தனர்!

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு கண்ணாடி நூலிழைப்படகில் சட்ட விரோதமாகக் கடத்திவரப்பட்ட ஏழு பொதிகள் அடங்கிய ஜவுளி துணிவகைகள், சேலைகள் சாரங்கள் ஆகியவையுடன் சம்பந்தப்பட்ட படகில்வந்த ஐவரும் வடபகுதி கடலில் வடபிராந்திய கடற்படையினரிடம் சரணடைந்தனர்.

இந்தப் படகில் பூட்டப்பட்ட மூன்று வெளியிணைப்பு இயந்திரங்களும் இயங்காத காரணத்தினால் மேற்படி ஐவரும் கடத்தல் பொருட்களுடன் சரணடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை வடபகுதி கடலில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அன்றையதினம் காங்கேசன்துறையிலுள்ள சுங்கப் பகுதி விசேட தடுப்பு பிரிவின
(8-ம் பக்கம் பார்க்க)

## 'கண்டிக்காடு படுகொலைகள்':

## புத்தூர் கிழக்கில் இன்று நினைவுக் கூட்டம்

(அச்சுவேலி)

புத்தூர் கிழக்கு கண்டிக்காடு படுகொலைகள் நினைவு தினம் இன்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

'கண்டிக்காடு படுகொலை' நினைவு நாள் தொடர்பாக பொதுக்கூட்டமும், நினைவு தூபி திறப்புவிழாவும் நடைபெறவுள்ளது.
(8ம் பக்கம் பார்க்க)

# அம்பாறை மாவட்டத்தில் போக்குவரத்து சீர்குலைவு!

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டத்தில் போக்குவரத்துச் சேவைகள் முற்முக சீர் குலைந்துள்ளது.

இந்த மாவட்டத்தில் மூன்று கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போக்கள் இயங்குகின்றன. இந்த டிப்போக்களில் சேவை செய்யும் ஊழியர்கள் செல்வதற்கு கூட பஸ்கள் கிடையாது!

இந்த மாவட்டத்தில் முன்னர் தனியார் வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்தன. அந்த வாகனங்களை பாதுகாப்புப் படையினர் போக்குவரத்துக்காக எடுப்பதனுல், தனியார் வாகனச் சொந்தக்காரர்களும் வாகனங்களை விற்பனை செய்துள்ளனர் இதனுல் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள மூன்று டிப்போக்களிலும் 125 பஸ்கள் உதிரிப்பாகங்கள் இல்லாமலும், டயர் இல்லாமலும் இருப்பதாக தெரியவருகிறது. வீதியில் ஓடக்கூடிய நிலையில் மூன்று டிப்போக்களிலும் 13 பஸ்கள் தான் இருக்கிறது.

பஸ்போக்குவரத்து சேவை கடந்த மூன்று வாரங்களாக மேலும் சீர் குலைந்திருக்கிறது

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்ருடியோ வேலையில் பயிற்சி பெறவிரும்பும் பெண்கள் 12-6-90-க்கு முன் நேரில் தொடர்புகொள்ளவும். A/L படித்த யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. கொழும்பு ஸ்ருடியோ, 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ785)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

கடந்த வருடம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆருவது) 07-06-90 வியாழக்கிழமை மு. ப 8-00 / 10-30, பி. ப. 1-00 / 3-30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். எமது நிலையத்தால் வெளியிடப்பட்ட மாதிரி விஞவிடை (8 பயிற்சிகள்) விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 25-00. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். (சி.3929)

# மட்டக்களப்பு மாவட்டம்
# உணவு முத்திரைகள் பாடசாலைகளுக்குவிநியோகம்

(மட்டக்களப்பு)

அரசின் மதிய உணவுத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 99,765 மாணவர்கள்நன்மை பெறவுள்ளனர். இதற்கென மாதமொன்றுக்கு 5,73,820 ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 2ம் திகதி அமுலுக்கு வந்த இந்தத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான மதியபோசன உணவு முத்திரைகள் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்திஞல் சகல உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும்.

மாணவர்கள் இம்முத்திரைகளை முழுமையாக ஒப்படைத்து ஒரே முறையிலேயே பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும் என்றும் பகுதி பகுதியாக முத்திரைகளை வெட்டி பொருள் வாங்க முடியாது என்றும் இதே போன்று முத்திரைகளை ஒப்படைத்து பணத்தையும் பெற இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மதிய போசன உணவு முத்திரைகள் ஒரு மாதத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதற்குள் பொருட்களை வாங்காவிட்டால், அவை ரத்துச் செய்யப்பட்ட முத்திரைகளாகக்கணிக்கப்படும்என்பது குறிப்பிடத்தக்கது. (121)

## கலைவிழா

(வட்டுக்கோட்டை)

தெல்லிப்பழை அம்பனைக் கொத்தணிப் பாடசாலைகளின் நிதிக்காக தெல்லிப்பழை அம்பனைக் கொத்தணியிஞல் நடத்தப்படவுள்ள கலைவிழா இம்மாதம் 20ம் திகதி தெல்லிப்பழை மகாஜனுக்கல்லூரியின் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

அம்பனைக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையான தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரியில் நடைபெறவுள்ள இக் கலைவிழாவில் அம்பனைக் கொத்தணிக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் நாடகம், நடனம், சங்கீதம் முதலான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அம்பனைக் கொத்தணிக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளை வெளிக்கொணரும் முகமாகவும், நிதி சேகரிக்கும் நோக்குடனும் நடத்தப்படவுள்ள இம்மாபெரும் கலை விழாவுக்கான சகல நடவடிக்கைகளையும் கலைவிழாக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (139)

# 'அடுத்த நாள் விடுமுறை' திட்டம் அமுலுக்கு வராது

[உடுவில்]

பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப்போட்டுகள். பரிசளிப்புவிழாக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்ற எந்த ஒரு நிகழ்ச்சியையும் காரணம்காட்டி, அந்நிகழ்ச்சி நடைபெற்று முடிந்த மறுதினத்தை விடுமுறைநாளாக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [109]

# உள்ளூராட்சித் திணைக்கள உயர் அதிகாரிகள் மாநாடு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள உயரதிகாரிகளுக்கான மாகாநாடு இம்மாதம் 14-ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும், பிரதேச சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

சூழலை மாசுபடுத்தக்கூடிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு அனுமதி வழங்கும் பொறுப்பு ஜூலை மாதம்முதல் சூழல் பாதுகாப்புச் சபையின் கீழ்கொண்டுவரப்பட்டுள்ளது. சூழல் பாதுகாப்புச்சபை இந்த அதிகாரங்களைப் பிரதேசசபைகளிடம் கையளித்துள்ளது.

இம் மகாநாட்டில் உள்ளூராட்சி திணைக்களப் பிரதிநிதிகளுக்குச் சுற்றுடல் பாதுகாப்புச் சம்பந்தமான வழிகாட்டல் பற்றி எடுத்துரைக்கப்படும். (121)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### 1000 வெள்ளிப் பதக்கம் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக' இலட்சினை பொறிக்கப்பட்ட வெள்ளியிலான 70x55 செ. மி. அளவுடைய நீள் வட்ட வடிவான 1000 பதக்கங்கள் வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இலட்சினை மாதிரிகளை அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

கேள்விகள் சகல விபரங்களையும் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூ. 150/- காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப் பத்திர தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''வெள்ளிப்பதக்கம் வழங்கலுக்கான கேள்விகள்'' எனக்குறிக்கப்பட்டு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு15-6-90 காலை 10 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படியாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல்வேண்டும். கேள்விகள் 15-6-90 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்.
(ஏ 784)

---

### பாடசாலைக் கட்டிட வேலைகள்

# கேள்வி கோருதல்

01. கீழ்க் கூறப்பெறும் பாடசாலைக் கட்டிட வேலைகள் சம்பந்தமாக இத்திணைக்களத்தில் வைப்புப் பணமாகச் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பதன் பேரில் (மீளளிக்கப் பெறும் ரூபா 250/-ம் மீளளிக்கப் பெருத ரூபா 50/-ம்) விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளர்கள் நீர்ப்பாசனத் திணைக்களம்/பெரும் தெருக்கள் திணைக்களம்/கட்டிடத் திணைக்களம்/கல்வி அமைச்சு போன்றவற்றில் ஒன்றில் பதிவு செய்த ஒப்பந்தப்புத்தகத்தினைக் காண்பித்தல் வேண்டும்.

02. கிராமோதய சபை/கிராம அபிவிருத்திச் சங்கம்/ஏனைய பதிவு செய்யப் பெற்ற சங்கங்கள் 1990-06-13ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமிடத்து விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்படும்.

| 03. | வேலைகள் விபரம் | பதிவுத் தொகை |
|---|---|---|
| 1. | வ/வவுனியா ம.வி. பகுதி 1 புனர்நிர்மாண வேலைகள் | ரூபா 7,50,000/-ம் அதற்கு மேலும். |
| 2. | வ/றம்பைக்குளம் ம.ம.வி. இரு மாடிக் கட்டிடம் | ரூபா மேற்படி |
| 3. | வ/பூவரசங்குளம் ம. வி நிர்வாக கூடம் | ரூபா 7,00,000/-ம் அதற்கு மேலுல் |
| 4. | வ/றம்பைக்குளம் ம.ம.வி. புனர்நிர்மான வேலைகள் | ரூபா 2,00,000/-ம் அதற்கு மேலும். |
| 5. | வ/காட்டுமான்குளம் அ. சி. க. பா - மேற்படி | ரூபா 3,00,000/-ம் அதற்கு மேலும். |
| 6. | வ/கல்மடு யூனிட் 1 அ. த. க.பா. - மேற்படி | ரூபா 2,00,000/-ம் அதற்கு மேலும். |
| 7. | வ/பெரியபுளியாலங்குளம் அ.த.க. பா. - மேற்படி | ரூபா 3,00,000/-ம் அதற்கு மேலும். |

(அ) விண்ணப்பப் படிவம் வழங்கும் திகதி: 1990-06-13 — 1990-06-22 காலை 10.00 மணி வரை.

(ஆ) கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி: 1990-06-26ம் திகதி காலை10.00 மணி வரை

(இ) கேள்விகள் திறத்தல்: 1990-06-26ம் திகதி காலை 10.30 மணிக்கு.

4. பூர்த்தி செய்யப்பெற்ற விண்ணபத்தினை கேள்விச் சபைத் தலைவர், கல்வித்திணைக்களம், வவுனியா என்ற விலாசமிட்டு, கடித உறையின் இடதுபுற மேல்மூலையில் ''கேள்வி கோருதல்'' எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இத்திணைக்களத்தில் வைக்கப் பெற்றுள்ள ரெண்டர் பெட்டியில் நேரில் வந்து சேர்த்துக் கொள்ளலாம்.

05. மேலதிக விபரங்களை, வவுனியா கல்வித்திணைக்கள பாடசாலைக் கட்டிட் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

சி. நவரத்தினராஜா
மாவட்டக் கல்விப் பணிப்பாளர்,
வவுனியா.

கல்வித் திணைக்களம்,
வவுனியா.
1990-05-29. (ஏ 778)


---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
17-02-1940

மறைவு:
21-05-1986

திதி: 05-06-1990



### அமரர் கந்தையா வேலுப்பிள்ளை

(முன்னுள் யாழ். மாவட்ட தொலைத்தொடர்பு பொறியியலாளர்)

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் நான்கு ஆண்டுகள்பூர்த்தியாகி விட்டாலும் உங்கள் அன்புமுகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்ருலும் மறையவே மறையாது! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
''வேல் அகம்'' குருக்கட்டு,
கரணவாய் தெற்கு.
கரவெட்டி, (சி 3913)

## அபிவிருத்தி வங்கி உதவி

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி 7 கோடியே 43லட்சம் டொலர் கடனையும், 17 லட்சம் டொலர் பெறுமதியான தொழில் நுட்ப உதவியையும் இலங்கைக்கு வழங்கவிருப்பதாக நேற்று தெரிவித்தது.

மின்சார உற்பத்தியை அதிகரித்து, ஆயிரம் கிராமங்களுக்கு புதிதாக மின்சக்தி வழங்க இந்த நிதி பயன்படுத்தப்படும். சலுகையடிப்படையில் வழங்கப்படும் இக்கடனை 40 ஆண்டுகளில் திரும்பிச் செலுத்தப்படவேண்டும். 10 வருடகால சலுகைக் காலமும் அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

# “உறுதிமிக்க எமது தியாகபோராட்டமே இலங்கை அரசை சிந்திக்கவைத்தது!”

## அஞ்சலிக் கூட்டத்தில் ஆஞ்சநேயர்

(பண்டத்தரிப்பு)

“தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க சிங்கள மக்களும், இலங்கை அரசும் மறுத்தபோது நாம் சுதந்திரமாக வாழ எமது இயக்கம் ஆயுதப் போராட்டத்தைமுன்னெடுத்துச் சென்றது. எமது வீரம் செறிந்த போராட்டத்தில் இதுவரை பல இளைஞர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்துபோராட்டத்திற்கு உரமூட்டினார்கள். உறுதிமிக்க தியாக போராட்டமே இலங்கை அரசை சிந்திக்க வைத்துள்ளது. எதற்கும் தயாரான நிலையில் எமது சக்தியை அதிகரிப்பதற்கு தமிழ் மக்களின் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும், பங்களிப்பும் இன்று அவசியமாகின்றது.

“இவ்வாறு பண்டத்தரிப்பில் நடைபெற்ற கனகசபை லோகேஸ்வரன், (வடிவு), கஜன் ஆகியோரின் மூன்ருவது ஆண்டு நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க பண்டத்தரிப்பு வட்ட பொறுப்பாளர் திரு. சிவா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஆஞ்சநேயர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

“எமது தியாக போராட்ட வரலாற்றை புரிந்து கொள்ளாத இந்திய இராணுவம் எம்மை நசுக்க முற்பட்டது. இதனால் தற்பாதுகாப்பு கெரில்லா யுத்தம் ஒன்றை 2½ ஆண்டுகளாக மேற்கொண்டோம். இக்கால கட்டத்தில் பல துயரங்களை நாம் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. உறுதிமிக்க வீரம் செறிந்தபோராட்டத்தில் பல போராளிகளை நாம் இழக்க நேரிட்டது. தமிழீழத்தின் வரலாற்றில் இந்த போராளிகளின் அடிச்சுவடு பதியப்படும்.”

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க வட்டுக்கோட்டை பொறுப்பாளர் ஐயர், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜ தலைவர் வ. செகராஜசிங்கம், முன்னுள் பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் ஆ. யேசுதாசன், எஸ். தனபாலசிங்கம் ஆகியோர் உட்படபலர் உரையாற்றினர்கள். (72)

### கிளிநொச்சி மாவட்டத்தில்—

# விவசாயப் பகுதி பாதைகள்

## சீர்கேட்டால் விவசாயிகள் கவலை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல விவசாயக் குடியேற்றங்களின் பிரதான வீதிகள் சேதமடைந்திருப்பதால் இவ்வீதிகளில் வாகனப் போக்குவரத்தைத் துண்டிக்கும்நிலை உருவாகிவருவதாக விவசாயிகள் புகார் செய்துள்ளனர்.

வட்டக்கச்சி-இராமநாதபுரம் வீதி குன்றும் குழியுமாகக் காட்சியளிப்பதுடன் இவ்வீதியில் வாகனப் போக்குவரத்தைத் துண்டிக்கும் நிலை உருவாகியுள்ளது. முறிகண்டி-அக்கராயன் குளம் வீதியும் முற்ருகச் சேதமடைந்திருப்பதால் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி டிப்போ அதன் பஸ்சேவையை நிறுத்திவிட்டது.

இவ்வீதிகள் சேதமடைந்து பல வருடங்களாகியும் திருத்செய்யப்படாதது குறித்து விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வீதிச் சீர்கேட்டால் தமது விளைபொருட்களை கிளிநொச்சிப் பொதுச் சந்தைக்குக் கொண்டுவந்து விற்பனவு செய்யமுடியாதநிலை உருவாகி வருவதாகவும் இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (83)

### இயங்காத சனசமூக நிலையங்கள்

# மூடப்படும்!

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் இயங்காதிருக்கின்ற சனசமூக நிலையங்கள் விரைவில் மூடப்படவுள்ளன.

இத்தகவலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்டுக்கோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர் ஐயர் தெரிவித்துள்ளார்.

“வலிமேற்கில் இயங்காது ஆடு மாடு வளர்க்கும் சனசமூக நிலையங்களாக இருப்பவை அனைத்தும் விரைவில் புனருத்தாரணம்செய்து மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இயங்கவேண்டும். நீண்டகாலமாகக் கூட்டங்கள் கூடப்படாதிருக்கும் சனசமூக நிலையங்களிலும் கூட்டங்களைக் கூட்ட வேண்டும். இன்றேல் அவை மூடப்படும்” எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [139]

## 2 பத்திரிகையாளரும் மூவரும் சுட்டுக் கொலை

(இஸ்லாமாபாத்)

இரண்டு பத்திரிகையாளர் உட்பட ஐவர் முகமூடியணிந்த துப்பாக்கி இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டில் மட்டும் வன்முறைச் சம்பவங்களினுல் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாகிஸ்தானியப் பிரஜைகள் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## உலக சூழல் சுற்றுடல் தினம் முல்லைத்தீவில் விரிவான ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

உலகச்சூழல் சுற்றுடல் வாரம் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மட்டத்தில் விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டத்தில் கட்டுரைப்போட்டிகளும், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சுத்தம் பேணல், திருத்தப்படாத பாதைகள் திருத்தல், துணுக்காய் ஆஸ்பத்திரி, ஒட்டிசுட்டான் நகர் பகுதி, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி போன்ற நிறுவனங்களின் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன,

பெருந்தெருக்கள் திணைக்களம், கமநலசேவைப்பகுதி, விசேட ஆணையாளர் கரைதுறைபற்று, தேசிய வீடமைப்பு சபை, விவசாயப்பகுதி ஆகியன இந்த உலகச்சூழல் சுற்றுடல் தினத்தன்று பல சிரமதான வேலைகளை மேற்கொள்ளவிருக்கின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் உலகச்சூழல் சுற்றுடல் தின விழாவில் பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை உரைநிகழ்த்த இருக்கிருர்.

இவ்விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் முல்லைத்தீவு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ப. பரம்சோதி இணைப்பாளராக நின்று நடத்துகிருர் என்பது குறிப்பிடத்தக்கது. [152]

## கிராமங்கள் தோறும் புத்தக வங்கித் திட்டம்

(வட்டுக்கோட்டை)

கிராமங்கள்தோறும் உள்ள பொதுமக்களின் நன்மைகருதி புத்தக வங்கித் திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினுல் கிராமத்திலுள்ள வசதிகுறைந்த மக்கள் பெருந்தொகையான நூல்களை வாசிக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுமென நம்பப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை அறவழிப் போராட்டக் குழு செய்துள்ளது.

ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள அறவழிப் போராட்டக் குழுவினுல் ஆரம்பிக்கப்பட்ட நூலகங்கள் இந்தப் புத்தக வங்கியில புத்தகங்களைப் பெற்றுத் தத்தமது கிராம மக்களுக்கு வாசிக்கக் கொடுக்கமுடியுமென அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் திரு. கே. ஜீவகதாஸ் தெரிவித்தார். [139]

## “தமிழனின் மூலதனம் கல்விதான்”

(மட்டுவில்)

“தமிழனுடைய வாழ்க்கையின் மூலதனம் கல்வி ஒன்றுதான். இதை எமது மாணவர்கள் மனதிற் கொள்ளவேண்டும். கல்வி கற்பது எதிர்கால எமது ஜீவனேபாயத்திற்குத் தான் என்று மட்டும் எண்ணிவிடக்கூடாது.”

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கூறினுர்.

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயனும் கலந்து கொண்டார். கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது:-

“கல்வியின் பயன் மிகவும் மேலானது. நேர்மை, கண்ணியம், அன்பு, சகிப்புத்தன்மை என்பனவற்றை மாணவர்களிடையே வளர்ப்பதும் கல்விதான். இப்படியான உயர்ந்த பண்புகளுக்கு வித்தான கல்வி ஒன்றையே அன்று முதல் இன்றுவரை எமது தமிழன் தனது பாரம்பரிய மூலதனமாகக் கொண்டு, வாழ்வில் உயர்ச்சியடைந்தான்.

“கல்வி ஒன்றுநான் மனிதனிடமுள்ள ஊனக் கண்களை விட, ஞானக் கண்களை அறிவுக் கண்களைத் திறக்க வைக்கிறது. எனவே கற்றபின்பும்- கண் இருந்தும்- குருடர்களாக நாம் வாழக்கூடாது மாணவர்களாகிய நீங்கள் கற்று, கற்பதைக் கசடறக் கற்று, கற்றபின் கற்ற அறிவினுக்கேற்ப வாழ்க்கையில் வாழவேண்டும்” என்ருர்.

மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (82)

## மகளிர் அபிவிருத்தி கருத்தரங்கு

(கிளிநொச்சி)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரின் மகளிர் அபிவிருத்தி தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்று கிளிநொச்சியில் மேற்கொள்ளவேண்டிய மகளிர் அபிவிருத்தி தொடர்பான பல தீர்மானங்களுடன் நிறைவுற்றது.

கொத்தணி அதிபர் திரு. எம். சோதிநாதன் மகளிர் கருத்தரங்கை வைபவரீதியாகத் தொடக்கிவைத்தார்.

டாக்டர் திருமதி கௌரி திருலோகமூர்த்தி, திருமதி இந்திராணி யோகரெத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றிக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தனர்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பிரதிநிதிகளும் சமூகமளித்திருந்தனர்.

பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, வண. பிதா ஜெபநேசன் அடிகளார், உதவி அரச அதிபர் பிரிவு நிர்வாக அதிகாரி திருமதி இந்துமதி, கிராம சேவையாளர் திரு. யோகேந்திரன், திருவாளர்கள்: ரி.எஸ். தர்மசிங்கம், ஆசிரியர் பி. கணேசன் ஆகியோர் உட்படப் பலர் கருத்துரை வழங்கினர். (83)

## பாலங்களின் புதிய அமைப்புவேலைகள் ஆரம்பம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சிக் குளத்தை அடுத்துள்ள இரண்டு பிரதான பாலங்கள் பல லட்சரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

வட்டக்கச்சி வீதிப் பாலம், பரவிப்பாஞ்சான் வீதிப்பாலம் ஆகியனவே புதிதாக அமைக்கப்பட்டுவரும் பாலங்களாகும்.

வன்செயல் இடம்பெற்ற காலப்பகுதியில் இப்பாலங்கள் சேதத்திற்குள்ளாகின என்பது குறிப்பிடத்தக்கது. [83]

## கல்வி அபிவிருத்தி மகாநாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் கல்வி அபிவிருத்திதொடர்பான மாநாடு ஒன்று ஞாயிற்றுக் கிழமை காலை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. என். சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது.

தமிழர் ஆசிரியர் சங்கம், சனசமூக நிலையங்களின் சமாசம் இணைந்து நடத்திய இம்மாநாட்டில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வன்னிப் பிராந்திய அரசியற் பொறுப்பாளர் திரு. சந்திரன், கிளிநொச்சி மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. கோபி, சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் கவிஞர் ப. வை. ஜெயபாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (83)

**மணிவாக்கு**

''பகைமை என்பது பகைக்கின்றவன் மனத்தையே மாசுபடுத்திப் புண்படுத்துகிறதன்றி பகைக்கப்படுபவனையன்று''.

—மகாத்மா காந்தி

## நமது நோக்கு

### ஜூன் ஐந்து!

ஜூன் 5- அரசியலிலே பல சம்பவங்கள் நடந்து விட்ட தினம்.

சிங்களம் மட்டும் என்ற சட்டம் மூலம் தமிழ்பேசும் மக்களை இரண்டாந்தரப் பிரஜாகளாக்கத் துணிந்து விட்ட நாள்.

இந்த நாட்டிலே ஒரே மொழிதான் அரசகருமமொழியாக இருக்கலாம் என்ற போதையை- மாயையை- பெரும்பான்மையினருக்கு ஊட்டி அதன்மூலம் ஆட்சிப் பீடத்துக்கு வந்தவர்கள் பல பாடங்களைக் கற்றுவிட்டனர்.

உடமைகளை, உயிர்களை இழக்குமளவிற்குப் பல தொல்லைகளை இந்த நாடு அனுபவித்துவிட்டது. இன ஒதுக்கற் சட்டங்களால், எண்ணங்களால்.

இன்று, உண்மைகள் உணரப்பட்டு வருவது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறிபோல் தெரிகிறது.

தமிழுக்கும் உரிமைகள் அளிக்கும் சட்டவிதிகள் சட்டப் புத்தகத்தில் இடம் பெற்றுவிட்டன.

எனினும், விதைத்த இனத்துவேஷம் இன்னும் சில மட்டங்களில் நீங்கவில்லைப்போலத் தெரிகிறது. மொழி அமுலில் ஏற்படும் தடைகளால், தாமதங்களால்.

இன ஒற்றுமையைப் பேணும் நோக்கோடு புதியஅரசகரும மொழிக்கொள்கையை விரைவாக அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது'' என்றிருக்கிறார் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின அண்மையில் வெளியிட்ட அறிக்கையில்.

தமிழ்மொழி அமுலில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்பது உரிய இடத்தில் உணரப்பட்டிருக்கின்றது என்பதற்கு இதுவே சாட்சி.

சில உடனடி நடவடிக்கைகள் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரசமொழித் திணைக்களம் தரம் உயர்த்தப்பட இருக்கின்றது.

இத் திணைக்களம் தரமுயர்த்தப்பட்டால், இங்கிருந்து வரும் சுற்றுநிருபஆணைகள் வலுவுள்ளதாக அமையும்; கண்டிப்புமிக்கதாக இருக்கும்.

அவ்வப்போது கூறும் குற்றச்சாட்டுகளை விசாரித்து, மொழி அமுலிலுள்ள தடைகளை நீக்கி உதவ, அரச மொழிகள் ஆணைக்குழு விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழு முழு அதிகாரமும் கொண்டதாக அமையும்.

இதற்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்திற்கு வரவிருக்கின்றது.

இதேவேளை, ஒரு குழு மாகாண, மாவட்ட அரச அலுவலகங்களுக்குச் சென்று வருகின்றது. மொழி அமுலில் உள்ள தடைகள், தாமதங்கள் ஆகியவற்றிற்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

தட்டச்சு பொறிகள், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் போதியளவு இல்லாமையும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது.


உதவி அரசாங்கஅதிபர் மட்டத்தில் அரச மொழிகளான தமிழ்,சிங்கள போதனைக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

உயர் அதிகாரிகளுக்கு மொழிச்சட்டம் பற்றிய விளக்கம் இன்மையால் தடைகள், தாமதங்கள் ஏற்படலாமல்லவா?

எனவே, விசேட கருத்தரங்குகள் மூலம் விளக்கம் அளிக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அடிப்பார் அடிப்பதால் அம்மியும் நகருகின்றது; மொழி அமுலும் விரைவுபடுத்தப்படுகின்றதா?

## இசைத் தேரேறி இன்று வாராய்



உப்பு மடத்தடிப் பிள்ளையாரே
உனையே நாடித் துதிக்கின்றோம்
முப்புரி நூலணி முதுகாட்டான்
முதல்மகனே எங்கள் மூத்தண்ணு
முப்பழமொடு பாலன்ன முமாய்
முறையாய்ப் படைப்போ முன்னடியில்
முப்புரமெரி செய்த அரன்மகனே
மூஷிகனே தேரில் ஏறிடுவாய்!

ஐந்து கரத்தோனே
ஐங்கரன் திருமகனே
சந்திர சேகரனே
சரித்திரம் கொண்டவனே
முந்திநீ உலகழந்தாய்
முதுமாங்கனி பெற்ருய்
வந்தனை செய்திடுவோம்
வண்ணத் தேரேறிவா

திசையெட்டும் மணியோசை
தருமின்ப ஒலியில்
இசையோடு இளந்தென்றல்
இசைந்திங்கு வீசும்
அசைந்தாடும் தும்பிக்கை
அனைவரையும் காக்கும்
இசைந்த தேரேறியின்று
இனியனே வருவாய்!

திருமதி இ. செல்லத்துரை

● இன்று கோண்டாவில் உப்புமடம் சந்திரசேகர பிள்ளையார் தேர்.

## தனிச் சிங்களச் சட்டம் வந்தபோது நாடாளுமன்றத்தில் கேட்டவை....!

**1956-ம்** ஆண்டு யூன் 5ம் திகதி இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமான தொன்ருகும். அன்றுதான் பாராளுமன்றத்தில் ஆட்சியிலிருந்த அரசின் பிரதமர் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இதனைச் சமர்ப்பித்ததும் காலஞ்சென்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினுர். 1946-ம் ஆண்டு அரசியலமைப்பின் 29-ம் சரத்தின் பிரகாரம் சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் சட்டம் அரசியல் சட்டத்தை மீறுவதாகும் என்றும், அதனோடு சம்பந்தப்பட்ட வியாக்கியானங்களைக் கூறிய பின்னர் இதற்கான தீர்ப்பைச் சபாநாயகரிடமிருந்து கோரினுர்.

இதன் பின்னர் திரு. பண்டாரநாயக்கா பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:- ''சரத்து 29-ன் பிரகாரம் சமயம் சம்பந்தமான விடயம் இங்கே எழவில்லை. எல்லாம் 'சமூகம்' என்ற சொல்லிலேயே தங்கியுள்ளது. இந்தச் சொல் இங்கே குறைந்த நிலையில்தான் உபயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பிரஜாவுரிமைச் சட்டத்தில் சில சமயங்களால் சமூகம் என்ற வார்த்தை இந்திய- பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டத்திற்குப் பொருந்துவதாக அமையலாம். அச்சட்டம் ஒரு சமூகத்திற்கு அதாவது இந்திய வம்சாவழியினருக்கு எதிராகச் செயற்பட்டது எனலாம். இச்சட்டமே அரசியற் சட்டம் 29-ம் பிரிவதை மீளவில்லை எனக் கருதப்பட்டது. ஆகையால் சிங்கள மொழியை உத்தியோகமாக்கும் சட்டம் அதனோடு ஒப்பிடும்போது மிகவும் பாரதூரமானதல்ல. குறிப்பாகச் சொன்னுல் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குவதே யாகும்.''

இதன் பின்னர் சபாநாயகர் தமது தீர்ப்பைப் பின்வருமாறு வழங்கினுர்:-

''இன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டம் சட்டபூர்வமானதா அல்லதா என்பதை என்னுல் கூறமுடியாது. இதுபற்றித் தகுதிவாய்ந்த நீதிமன்றத்திலேயே தீர்ப்பு வழங்க முடியும். இங்கே சமர்ப்பிக்கப்பட்ட சட்டம் அரசியலமைப்பின் எந்தவொரு பகுதியையும் நீக்கவோ அல்லது மாற்றவோ இல்லை. ஆகையால் எனது அபிப்பிராயப்படி மூன்றில் இரண்டு பங்கு மேலதிக வாக்குகள் தேவையில்லை. இதைத் தொடர்ந்து இரண்டாவது வாசிப்பும், தமிழ்–சிங்கள அரசியற் தலைவர்களின் பேச்சுகளும் பாராளுமன்றத்தில் இடம் பெற்றன.

இச்சட்டத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக பாராளுமன்ற வாயிலில் தமிழ் அரசுக்கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்ய அனுமதி கோரியதும் அதனை அரசு தடை செய்தும் பின்னர் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்த பொழுது கொழும்பிலும் பிறமாவட்டங்களிலும் இடம்பெற்ற சம்பவங்கள் எல்லாம் பழம் கதை இத்தனைக்கும் சிங்களம் மட்டும் சட்டத்தின் சரித்திரம் தொடர்கிறது. முடியவில்லை. திரு.பண்டாரநாயக்கா இருபத்தினன்கு மணித்தியாலயங்களில் செயற்படுத்தலாம் என்ருர். முடிந்ததா? ஜூன் 14 ந் திகதி இச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அன்று அதிகாலை 5-45 மணியளவில் திரு.பண்டாரநாயக்கா இச் சட்டம் மூன்ரும் முறையாக வாசிக்கப்படும் என்பதை தெரிவித்த பொழுது திரு ஜி. ஜி. பொன்னம்பலம் 'தற்பொழுது' என்பதை நீக்கி 1000 ஆண்டுகளுக்கு பின்னர் என்ற சொற்களை சேர்க்கும்படி

(5-ம் பக்கம் பார்க்க)

## மாணுக்கர் மலர்ச்சிக்காக...

**சமூகவியல்**

### அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பிரதான அம்சங்கள் எவை?

(1) தனிநபர் மொத்த தேசிய வருமானம் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுவது.

(2) போதியளவு உணவு கிடைக்காமை. கிடைக்கும் உணவிலும் போதியளவு போஷாக்கின்மையால் கடின உழைப்பை எதிர்பார்க்க முடியாதுள்ளது. இவர்களைச் சுமையாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் 5 வயதிற்கு உட்பட்டோரில் 63% போஷாக்கு அற்றவர்கள். 1987ல் எத்தியோப்பியாவில் ஏற்பட்ட பஞ்சத்தில் நாளொன்றுக்கு 200பேர் பலியானுர்கள்.

(3) அன்னியர் ஆட்சிக்கு நீண்டகாலமாக அடிமைப்பட்டிருந்தமை. இலங்கை சுமார் 450 ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்தது தான்சானியா ஜனுதிபதி ஜூலியஸ் நியரே கூறினுர்: ''நாங்கள் ஏழைகளாக இருப்பதற்கு காரணம் நீங்கள் செல்வந்தராக இருப்பதே!''

(4) வர்த்தகப் போக்கு பாதகமாக இருப்பது. சர்வதேச வர்த்தகப் போட்டியில் வளர்ச்சியடைந்த நாடுகள் தொழில்நுட்ப வளர்ச்சியால் தமது பொருட்களை மலிவாக உற்பத்தி செய்து அனுப்புகின்றன.

(5) இந்த நாடுகள் ஏறத்தாழ 70% விவசாயத்திலேயே தங்கியுள்ளன. நவீன மயப்படுத்தல் இன்மையாலும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்து வருவதாலும் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது.

(6) விளைநிலங்கள் துண்டாடப்பட்ட சிறிய நிலவுடைமைகள் ஆகவும் சிதறியும் காணப்படுகின்றன. இதனுல் விவசாய நடவடிக்கைகள் பாரம் பரியமானவைகளாக உள்ளன. எனவே உணவுப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(7) விரைவான சனத்தொகை பெருக்கம் பல பாரிய பிரச்சனைகளுக்கு அடிப்படை காரணமாகின்றது.

(8) வேலையில்லாப் பிரச்சனை தலையாய பிரச்சனைகளில் ஒன்ருக இருக்கின்றது. எதுவித வேலையில்லாமல் இருத்தலும், தகுதிக்கேற்ற வேலையில்லாமையும் பிரச்சனைகளாகும். தொழில்கள் விஸ்தரிக்கப்படாமையும், நிதிப்பற்ருக் குறையுமே காரணங்களாகும்.

(9) பெரும்பாலான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நாணயங்களை 'மென் நாணயங்கள்' (Soft Currency) என்கின்றனர். அதாவது. கணிப்புக்குறைந்த, சர்வதேச சந்தையிற் பொதுவாக விரும்பப்படாத நாணயங்களாகும். இதனுல் வர்த்தகத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

(10) தொழில் வளர்ச்சியில் மிகப்பின்தங்கிய நிலையில் உள்ளன. தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி பெருமையும், பாரிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குரிய நிதிவசதிகள் போதாமையும் காரணங்களாகும்.

சு. சிவமணி

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

## பலதும் பத்தும்

சுதந்திரம் ... எதற்கும், எல்லாவற்றிற்குமா? சமூகத்திலே ... பலர்கூடி வாழும் அமைப்பிலே ... ஒருவரின் சுதந்திரம் மற்றவருக்கு இடையூருக அமையலாமா?

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்பாடு. அடிப்படை அறநெறிகள் இலக்கியம், கலை என்ற பெயரால் இழிவு படுத்தப் படலாமா?

கலை. இலக்கியம் ... ஆபாசம் 'புகுந்து விளையாட எல்லையில்லையா? விற்பனைக்காக எதையும் எழுதலாமா? எதனையும் காட்டலாமா?

குண்டுச் சட்டிக்குள் நாம் குதிரை ஓட்டவில்லை; சர்வதேச மட்டத்திற் சர்ச்சை கிளப்பட்டிருக்கின்றது!

சர்வதேச திரைப்பட விழா கேன்ஸ் நகரத்தில் இடம் பெறுவதல்லவா? இம்முறை பிரச்சனைக்குரிய இயக்குனர் டேவிட் லின்சிச்கின் ''Wild at Heart'' முதற் பரிசைப் பெற்று விட்டது'

ஆனுல் ... அதிற்காணப்பட்ட பாலியல் ... இதயத்தைப் பிளக்கும் வன்முறைக் காட்சிகள் ...? கேள்விக்குரியவைதானும்!

இப்படம் அமெரிக்காவிலே திரையிடப்படுமுன்... தணிக்கை செய்யப்பட வேண்டும் என்ற சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

ஏற்கனவே ...குறிப்பிட்ட சிலருக்கு இப்படம் போட்டு காட்டிய போது ... பலர் இடையிலேயே எழுந்து சென்றுவிட்டனராம்!

இதனுலேயே ...சிலகாட்சிகளை உடன்வெட்டி விட்டாராம் ...!

வாணி

# தியாகி சிவகுமாரன்

தமிழ் இனத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த தியாகி சிவகுமாரன் மறைந்து, இன்று பதினாறாவது ஆண்டு நினைவுதினமாகும்.

1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந் திகதி சிவகுமாரன் தனது உயிரைத் தியாகம் செய்த தினமாகும்.

சிவகுமாரனின் மரணச் சடங்கில் யாழ். குடாநாட்டின் வரலாற்றிலே முதல் தடவை தங்கள் கணவர் இறந்தால் கூட வீட்டைத் தாண்டி வீதிக்கு வராத தாய்மார் பல ஆயிரக்கணக்காக கதறித்துடித்து கண்ணீர் வழிய உரும்பராய் சுடலை வரை திரண்டு சென்றனர்.

எமது மண்ணில் வாழ்ந்த விடுதலை வேட்கை நிறைந்த 24 வயதுவரை வாழ்ந்துவிட்ட உரும்பராய் பொன்னுத்துரை சிவகுமாரனின் தமிழ் இன இலட்சிய வாழ்வின் மதிப்பீடு காரணமாக தமிழ் மக்கள் வெள்ளம் திரண்டது.

சமுதாய சீர்திருத்தமே சிவகுமாரனின் பொதுவாழ்வின் தொடக்கமாக இருந்தது. 1970-ம் ஆண்டு தமிழ் மாணவர்களின் உயர் கல்வியையே ஒழித்துக்கட்டுவதற்காக புதிய பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமான தரப்படுத்தல் திட்டம் புகுத்தப்பட்டது.

1970-ம் ஆண்டு நவம்பர் 24-ந் திகதி தரப்படுத்தல் திட்டத்தை எதிர்த்து தமிழ் மாணவர்கள் வரலாறு காணாத கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை யாழ். நகரில் நடத்தினார்கள். இந்த ஊர்வலத்தை முன்னின்று நடத்தியவர்களில் சிவகுமாரனும் ஒருவர்.

1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் உரும்பராய்க்கு வருகைதந்த உதவி அமைச்சர் சோமவீர சந்திரசிறிக்கு கைக்குண்டு வீசியதாக சந்தேகத்தின்பேரில் பொலிசார் சிவகுமாரனை கைதுசெய்து விளக்கமறியலில் வைத்தார்கள். இரண்டு மாதங்கள் விளக்கமறியல் சிறைக்குள் இருந்த சிவகுமாரன் மீது வழக்குத் தொடர ஆதாரங்கள் இல்லாத பொலிஸார் வேறு வழியின்றி விடுதலை செய்தனர்.

1971-ம் ஆண்டு மார்ச் மாதம் யாழ். பிரதான வீதியில் யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவின் காருக்கு குண்டு வைத்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிசார் இவரைக் கைதுசெய்தனர். 21 மாதங்களாக யாழ். அநுராதபுரம் சிறைச்சாலைகளில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவர்மீது ஆதாரபூர்வமாக வழக்குத் தாக்கல் செய்ய வழியற்று பொலிஸார் இறுதியில் விடுதலைசெய்தனர்.

1974-ம் ஆண்டு தைத் திங்களில் நான்காவது உலகத் தமிழ் மாநாடு யாழ். நகரில் நடைபெற்றது. ஜனவரி 9-ம் திகதி ஈழத்தமிழர் வரலாற்று பெருமை பேசும் ஊர்தி ஊர்வலம் நல்லூர் சட்டநாதர் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாக இருந்தது.

''எப்படை எதிர்த்து வந்தாலும் அஞ்சேன்'' எனக் கர்ச்சித்த வன்னி மாவீரன் பண்டாரவன்னியன் என்னும் வாசகம்ஊர்தியொன்றில்பொறிக்

## மா. அ. கி. துரைநாயகம்

கப்பட்டிருந்தது. அந்த வாசகத்தை அனுமதிக்கமுடியாது என்றார் யாழ். உதவி பொலிஸ் அத்தியட்சகர் சாந்தகுமார சந்திரசேகரா. இதைத் தொடர்ந்து சிவகுமாரனின் தலைமையில் அந்த இடத்தில் ஒரு சாத்வீகப் போராட்டம் நடந்தது. இறுதியில் சிவகுமாரனுக்கு வெற்றி கிடைத்தது.

தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸ் அட்டூழியத்தின் விளைவாக ஒன்பது தமிழ் மக்கள் மாண்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்தனர்.

உலகத்தமிழ் மாநாட்டின் இறுதி நாள் பொலிஸ் வெறியாட்டத்திற்கு பொறுப்பானவர் என்று கருதப்பட்ட யாழ் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகராவை யாழ். கைலாசபிள்ளையார் கோவில் முன் வீதியில் கொலைசெய்ய முயன்றதாக சந்தேகத்தின் பேரில் சிவகுமாரனைத் தேடினார்கள்.

1974-ம் ஆண்டு ஜூன் 5-ந் திகதி உயிர் தமிழுக்கு 'உடல் மண்ணுக்கு' என்ற வகையில் சிவகுமாரன் தன்னுயிர் ஈந்தார்.

## மலையென வருந்தேர்கள் ஐந்தையும் காண்போம் வா!

ராகம்—ஆனந்தபைரவி　　　　தாளம்—ஆதி

பல்லவி

அருள்மிகு கேதீசன் எழில்மிகு தேரேறி
வருமெழில் தனைக்காண வா — என்கண்ணே!
...(அருள்...)

அனுபல்லவி

அன்னையின் அமுதுண்ட அருட்கடல் சம்பந்தர்
கன்னலின் தமிழாலே கனிந்தருட் துதிசெய்த
...(அருள்...)

சரணம்

ஆடிடும் அடியாரின் அன்பினைக் காணாயோ!
பாடிடும் அடியாரின் பாசத்தைக் காணாயோ!!
தாவிடும் அடியாரின் தவிப்பினைக் காணாயோ!
கூவிடும் அடியாரின் குமுறலைக் காணாயோ!!
...(அருள்...)

0　0　0

மலையென வருந்தேர்கள் ஐந்தையும் காண்போம்வா!
கலைமிகு பெருந்தேர்கள் அழகினைக் காண்போம்வா!!
அலையென அடியாரின் ஆனந்தம் காண்போம்வா!!
அரஹர எனத்தேர்கள் இழுப்பதைக் காண்போம்வா!!
...(அருள்...)

0　0　0

நாதனுடன் அன்னை வருமெழில் ரசிப்போம்வா!
பூதகண நாதன் பொலிவினில் சுகிப்போம்வா!!
ஆறுமுக நாதன் அழகினில் திளைப்போம்வா!
ஆசிதரும் ஈசன் எழில்தனில் களிப்போம்வா!!
...(அருள்...)

—'முருகு'

[இன்று திருக்கேதீச்சரத்தில் தேர்த்திருவிழா]

## புனித அந்தோனியார் திருவிழா

(மன்னார்)

மன்னார் தள்ளாடி புனித அந்தோனியார் திருவிழாவுக்கானஏற்பாடுகள்நடைபெற்று வருகின்றன. ஆலயத் திருப்பணிச்சபையினர் சிரமதான மூலம் திருத்தவேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

இம்மாதம் 10ம் திகதி முதல் வழிபாடுகள் நடைபெறும். திருவிழாவான 13ம் திகதி கூட்டுப் பாடல் பூசை மன்னார் மறை ஆயர் அதிவண கலாநிதி தோமஸ் சுதந்திரநாயகம் தலைமையில் இடம்பெறும்.

திருவிழா ஏற்பாடுகளை பங்குத்தந்தை அருட்திரு ரு. பி. தேவசகாயம் மேற்கொண்டு வருகிறார். (85)

## பூங்கா அமைக்க முயற்சி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பிரதேசத்தில் மாபெரும் பூங்கா ஒன்றை அமைக்க வட்டுக்கோட்டைப் பிரதே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

இங்குள்ள பொதுமக்கள், சிறுவர்கள் பயன்படுத்தும் வகையில் பெருந்தொகையான செலவில் மிகச்சிறந்த முறையில் இந்தப் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இந்தப் பூங்கா அமைப்பு வேலைகளை இப்பிரதேசத்திலுள்ள சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகள் சிரமதான முறையில் செய்யவுள்ளனர். (139)

## விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவாலயம் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கற்கோஷ்டிக்கு பதினையாயிரம் ரூபா பெறுமதியான கிரிக்கற் உபகரணங்கள் வழங்கியது.

மேலும் கரம், சதுரங்கம், டிராவ்ட்ஸ், கடதாசிக் கூட்டம், பாம்பும் ஏணியும், லூடோ போன்ற விளையாட்டுகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர்; சு. பாஸ்கரன் தெரிவித்தார்.

இவ் விளையாட்டுக்கள் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வளவில் இம் மாதம் 9ம் திகதி மாலை சங்கஉபதலைவர்: திரு. ச. கார்த்திகேசு அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

## இ. த. ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

[உடுவில்]

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட வருடாந்த பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகள் தெரிவு திரு. த. அருணகிரிராசா தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: செ. சோதிப்பெருமான் (மானிப்பாய் கிளை), உப-தலைவர்கள்: சி. தார்சீசியஸ் (யாழ்ப்பாணக் கிளை) அ. தற்பரானந்தன் (மானிப்பாய் கிளை), சு. முத்துக்குமாரசாமி (கோப்பாய் கிளை), செயலாளர்: கா. தவராசா (நல்லூர் கிளை), உப செயலாளர்கள்: த. சிறீகாந்தன் (கோப்பாய் கிளை), இ. தருமகுலசிங்கம் (யாழ்ப்பாணக் கிளை), பொருளாளர்: க. கருணாநிதி (உடுப்பிட்டி கிளை), பிரசாரச் செயலாளர்: பொ. கந்தசாமி (வட்டுக்கோட்டை கிளை), கணக்காய்வாளர்: பி. ஜெயராஜசர்மா (வேலணைக் கிளை), சு. வீரசிங்கம் (புங்குடுதீவு கிளை) (109)

## வெல்வில் முருகன்

சீரேறு சங்கானை வெல்வில் குருபரனும் முருகனும்
காரேறு வண்ணமுறு கற்பகத்தின் அருள்பூப்ப
தாரேறு வாகுவடம் தண்ணெழில்சேர் சித்திரத்தின்
தேரேறிப் பவனிவரும் தெய்வீகம் காணுதியோ

சித்திரத்தின் தேர்மீது சிற்பானும் முருகனும்
அத்திமுக அழகுடன் ஆறுமுகம் பூத்திடவே
பக்தியுடன் தொழுவோர்க்கு பாலித்திடுவான் அருள்
இத்தலமாம் சங்கானை வெல்விலில் இறைஞ்சிட
வாரீரோ

ஊர்கூடித் தேர்இழுத்தே உமைபாலன் ஆறுமுகன்
பார்போற்ற வருகையிலே பக்திசெய்து பதம்பாட
சீர்மேவு வெல்வில் எனும் முருகனும்
ஓர் வண்ண அழகு ஆறுமுகனை கண்டுகொள
வாரீரோ

-- சிவஸ்ரீ இராமநாத விஜயகுமாரக் குருக்கள்

★ இன்று சங்கானை வெல்வில் முருகமூர்த்தி கோவில் தேர்.

## தீவுப்பகுதியில் மணல் ஏற்றுவதற்கு தடை

(வேலணை)

தீவுப்பகுதியில் மணல், ஊரி ஏற்றுவதற்கு முற்றாகத்தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் குளங்களை ஆழமாக்கி நீரைச் சேமித்து வைப்பதற்கான காரணங்களால் குளங்களில் உள்ள மண்ணை மட்டும் அவ்வவ் பகுதியில் உள்ள சிற்றூர் அவைகளின் சிபார்சுக்கடிதங்களுடன் விடுதலைப்புலிகளின் அனுமதி பெற்று மண்ணை எடுக்கலாமென்றும், சிரமதான மூலம் வீதி அமைத்தல் திருத்துதல் போன்ற விடயங்களுக்கு ஊரி மண் வேண்டுமானாலும் இவ்வாறே அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. (75)

## ''தாயகப்பூமியை தமிழ் - முஸ்லிம் மக்கள் பாதுகாக்க வேண்டும்''

- லக்ஸ்மன்

(மன்னார்)

மன்னார் அல்ஸார் மகாவித்தியாலயத்தின் அஹதியா சமயப்பாடசாலை பரிசளிப்புவிழா மன்னார் அல்அஸார் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட அஹதியாபாடசாலைகளின் தலைவர் தலைமை வகித்தார்.

மன்னார் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஜனாப் இஸட் ஏ. ரகீம் பிரதம அதிதியாகவும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் தீவுப்பகுதி விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்திரு. லக்ஸ்மனும் மன்னார் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அலுவலகப் பொறுப்பாளர் திரு. துசியந்தனும் கலந்துகொண்டனர்.

திரு. லக்ஸ்மன் தமது சிறப்புரையில் ''மன்னார் மாவட்டம் கல்வியில் பெரிதும் பின்தங்கியுள்ளது. மாணவர்களாகிய நீங்கள் கல்வியில் ஊக்கம் எடுத்து எதிர்காலத்தில் நற்பிரசைகளாக திகழவேண்டும் இன்றையமாணவர்கள்நாளைய தலைவர்கள் என்பதை மனதில் கொள்ளுங்கள். மதத்தால் வேறுபட்டாலும் நாம் பேசுவது தமிழ் தமிழர்களின் தாயகப்பூமியை வடக்கு கிழக்கு முஸ்லிம்மக்கள் சாதி,மத பிரதேச வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். பாடசாலையில் மாணவர்கள் தேவையற்ற பொழுதுபோக்குகளைத்தவிர்த்துக் கல்வியில் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும்'' என்றார்.

பரிசளிப்பு நிகழ்ச்சிகள்இடம் பெற்றன. (85)

## தனிச் சிங்கள

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சபையிற் அனுமதி கோரினார்.

இறுதியில் இவ்விவகாரத்தில் பேசியவர் திரு. சி. சுந்தரலிங்கம் அவர் தெரிவித்த கருத்துக்கள் காலங்கடந்த நிலையிலும் கருத்துள்ளதாகத் தான் இருக்கின்றது.

''நான் ஏற்கனவே தெரிவித்தவாறு இச்சபையின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மாட்டேன். எனது வேலைகள் இனிமேல் வெளியில் தான் இருக்கும். பிரதமமந்திரி அவர்களே! எனது போர் வெளியில் நீதிக்காவும் நியாத்திற்காகவும் அமைந்த தொன்றாக இருக்கும். ஆனால் நீங்கள் எதிர்பார்க்கும்ஐக்கியம்இங்கே ஒரு சாதாரண விடயம் நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. இறைவன் கருணையினாலே இலங்கை பிளவுபட்டதாகவே இருக்கும்'' இதற்கு பதிலளித்த பிரதமர் இறைவன் உம்மை ஆதரிக்கமாட்டார் என்றார். இன்று 34 வது ஆண்டில் நிற்கின்றோம்.

— ரேகினி

## வீதி திருத்தம் விவசாயிகள் மகிழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

நீண்ட காலமாகப் போக்குவரத்துக்குச் சீர்கெட்டநிலையில் இருந்துவந்த மாதகல் பெரியவிளான் வீதி 90-ஆயிரம் ரூபா செலவில் திருத்தப்படவிருக்கிறது.

இவ்வீதி திருத்தப்படுவதால் தங்கள் காணிகளுக்கு இலகுவாக போக்குவரத்துச் செய்யக்கூடியதாக இருக்கும் என்று இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (72)

## ஆசிரியர்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் ஆசிரியர்களுக்கான பயிற்சிவகுப்புஇம்மாதம் 7-ம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும். (109)

# பாப்பரசரை தலாய்லாமா சந்தித்தார்

(வத்திக்கான்)
தீபெத்திய பௌத்த மதத் தலைவர் தலாய்லாமா, பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்,

1959-ம் ஆண்டு சீனா, தீபெத்துக்குள் நுழைந்தபின்னர், இந்தியாவுக்குப் புகலிடம் தேடிச் சென்ற இம்மதத்தலைவர் ஐந்தாவது தடவையாகப் பாப்பரசரைச் சந்தித்துள்ளார் என்றும், மத அடிப்படையிலான இச்சந்திப்பின் போது மனிதாபிமான பிரச்சனைகள் குறித்துக் கருத்துப் பரிமாறப்பட்டதாக வத்திக்கான் அறிவித்துள்ளது. (அ)

# தமிழ்த் தேசிய தினவிழா கொழும்பில் நடைபெறும்

(மட்டக்களப்பு)
தேசிய மட்டத்திலான தமிழ்த்தேசிய தின விழா இம்மாதம் 16ம் 17ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

கடந்த 2ம் 3ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த் தேகிய தின விழா போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் நிகழ்ச்சிகளும் பரிசளிப்பும் இவ்விழாவில் இடம்பெறும்.

தெரிவான மாணவர்களை அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவுப் பணிப்பாளர் திரு. வி. சபாரத்தினம், வடகிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். (121)

# குண்டுவெடிப்பு: அரசியல்பின்னணிகாரணம்?

(லண்டன்)
செக்கோஸ்லோவக்கியாவில் அண்மையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 20 பேர் பலத்த காயம் அடைந்தனர். பலர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதியில் பலகட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் கட்டிட இடிபாடுகளுள் பலர் சிக்கியிருக்கலாமெனவும் மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்பிற்கு அரசியல் சக்திகளே காரணமென்று தகவல்துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் 8-ம், 9-ம் திகதிகளில் இங்கு பொதுத்தேர்தல் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

குண்டுவெடிப்பு இடம் பெற்ற சம்பவம் குறித்து அரசியல் வட்டாரங்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளன. (க)

# வைகாசி விசாக விழா

(யாழ்ப்பாணம்)
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வைகாசி விசாக விழாவும் கந்தபுராண படனப் பூர்த்தியும் நாளை புதன்கிழமை காலை நடைபெறும்.

நண்பகல் மகேசுர பூசையும் மாலையில் முருகப்பெருமான் மணவாளக் கோலராய் உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

# மன்னார் மாணவர்கள் அகில இலங்கை சுற்றுலா

(மன்னார்)
கடந்த ஏழுவருடங்களுக்கு பின்னர் மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் அண்மையில் சுற்றுலா மேற்கொண்டனர். உயிர்தராசன் குளம் றோமன்கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்கள் அதிபர் திரு. எஸ். திபூர்சியஸ் பீரீஸ் தலைமையில் சுற்றுலா ஆரம்பித்துள்ளனர்.

நானாட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 150க்கு மேற்பட்ட மாணவர்கள் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். வங்காலை மத்தியமகா வித்தியாலய மாணவர்களும் அகில இலங்கை சுற்றுலாவை ஆரம்பிக்க உள்ளனர். (85)

# மூன்று சக்கர வண்டி ‘லயன்ஸ்’ அன்பளிப்பு

[மட்டுவில்]
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு, கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ்கழகம் இரண்டு மூன்று சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

இதன் மூலம் இரு வலது குறைந்தவர்கள் பலனடையவுள்ளனர்.

சுமார் 10,000 ரூபா பெறுமதியான இந்த மூன்று சக்கர வண்டிகளையும் பெற்றுக் கொண்ட சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் திரு. இ. பி. தியாகராசா கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத் தலைவருக்கு நன்றி தெரிவித்துள்ளார். (82)

# ஆசிரியர் பயிற்சிவகுப்பு

[உடுவில்]
உடுவில் கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளில் ஐந்

(7ம் பக்கம் பார்க்க)

# “குடும்ப நலத் திட்டம் அத்தியாவசியமானது”

[பண்டத்தரிப்பு]
‘‘எமது குழந்தைகள் எதிர்காலத்தில் சக்திமிக்க இளைஞர்களாகவும், உடல்-உள வளர்ச்சி பெற்றவர்களாகவும் விளங்குவதற்கு குடும்பநலத் திட்டம் உதவுகின்றது. பிறக்கும் குழந்தைகளை நல்லமுறையில் வளர்ப்பதற்கு தாய், சேய் நலனை அடிப்படையாகக் கொண்ட குடும்பநலத் திட்டம் அனைவராலும் பின்பற்றப்பட வேண்டியதொன்ருகும்’’

இவ்வாறு இலங்கை குடும்பத் திட்ட சங்கத்தின் ஆதரவில் பிரான்பற்று கிராம குடும்பநல செயற்குழுவினரால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கை குடும்பத் திட்ட சங்க யாழ் மாவட்ட முகாமயாளர் திரு. என். ரி. அன்பானந்தன் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. அ. ஈஸ்வரலிங்கம் தலைமையில் கடந்த சனிக்கிழமை பிரான்பற்று முருகமூர்த்தி ஆலய வீதியில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. அன்பானந்தன் தொடர்த்து உரையாற்றுகையில் கூறியதாவது:

‘‘எதிர்காலத்தில் உறுதி மிக்க சமுதாயம்ஒன்றை கட்டி எழுப்புவதற்கு இக்கிராமத்திலுள்ள சகலரும் கிராமத்திலுள்ள குடும்பநலத் தொண்டர்களுடன் ஒத்துழைத்து, தங்கள் பங்களிப்பைச் செய்ய முன்வரவேண்டும். தாய்-சேய் நலனை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் விளங்குவதினுல் எவரும் இதுபற்றி தப்பபிப்பிராயம் கொள்ளத் தேவையில்லை’’

பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் திரு. பொ. பேரின்பநாதன் உரையாற்றுகையில், பின்தங்கிய கிராம மக்கள் முன்னேற்றமடைவதற்கு இதுபோன்ற குடும்ப நலத் திட்டங்கள் பேருதவி செய்கின்றன. எனினும் குழந்தைகளுக்கு போஷாக்கு மிக்க நல்ல உணவுவகைகளை வழங்கி அவர்களை சக்திமிக்கவர்களாக உருவாக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பிரான்பற்று கிராம சேவை அலுவலர் எஸ். நாகராசா, கே. தனராஜசிங்கம், செல்வி ஜெயவதனி சிறிஸ்கந்தராசா, ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள். சூரியன், சந்திரன் ஆகிய இரு இல்லங்கள் ரீதியாக நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் சந்திரன் இல்லம் அதிக புள்ளிகளைப்பெற்று வெற்றியீட்டியது. பரிசில்களை திருமதி அன்பானந்தன் வழங்கினர். குடும்பநலத்திட்ட பயிற்சி வகுப்பில் சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ்களை திரு. அன்பானந்தன் வழங்கினர். திரு. நா. தங்கத்துரை நன்றியுரை நிகழ்த்தினர். [72]

## இராசி பலன்

05 - 06 - 1990
செவ்வாய்க்கிழமை

மேடம்: கடன் தொல்லை, உறுதி, இனசன விரோதம், செலவு.

இடபம்: பெண் நட்பு, பொய் பேசுதல், தொழில் சிந்தை.

மிதுனம்: உழைப்பு, இடமாற்றம், சுகவாழ்வு.

கடகம்: நியாயப்போராட்டம், அரசபயம், யாத்திரை.

சிங்கம்: பிடிவாதம், பணக்கஷ்டம், நன் முயற்சி.

கன்னி: பிடிவாதம், தைரியம், வாக்குச்சித்தி.

துலாம்: அற்பர் உதவி, மறதி, அயலவர் பிரச்சனை.

விருச்சிகம்: உடல் உபாதை, மறதி, சாஸ்திர விருப்பு.

தனுசு; உறவினர் நட்பு, இடையூறு, செலவு.

மகரம்: குழப்பம், சிந்தனை, காரியத்தடை.

கும்பம்: வாகன சுகம், நற்சிந்தனை, மாற்றம்.

மீனம்: சங்கீதம், சலன சிந்தை, உபத்திரவம்.

இ. மகாதேவா

# சிற்றூர் அவை உத்தியோகத்தர்

(வடமராட்சி)
கரவெட்டி வடக்கு சிற்றூர் அவை உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: சி. ஆர். அலோசியஸ், செயலாளர்: சி. கந்தசாமி, பொருளாளர்: ச. யோகேந்தரன், உபதலைவர்: சு. நடேசன், உபசெயலாளர்; இ. ஜெ. அரியநாயகம். (51)

# “நீதி, நியாயம் அடிப்படையில் இணக்க மன்று உறுப்பினர் மக்கள் ஆதரவு பெறவேண்டும்”

(நெல்லியடி)
‘‘இணக்கமன்று உறுப்பினர்கள் லஞ்சம், ஊழல், குற்றச் செயல்களில் ஈடுபடாது மக்களின் பிரச்சனைகளை அவர்களின் மனம் கோணுதவகையில் நீதி, நியாயம், அன்பு ஆகிய வடிவங்களின் ஊடாக தீர்க்க முற்படவேண்டும். அவ்வாறு செயற்படும் பட்சத்தில் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று எமது இலட்சியப் பயணத்தை துரிதமாகவும், சிறப்பாகவும் முன்னெடுக்கமுடியும்’.

இவ்வாறு கரவெட்டி, கரவெட்டி தெற்கு, கரவெட்டி வடக்கு, மத்தொனி ஆகிய சிராமசேவை அலுவலர் பிரிவுகளுக்கான ‘இணக்க மன்று’ உறுப்பினர் தெரிவு வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. குணபால் குறிப்பிட்டார்.

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில் நடைபெற்றமேற்படி வைபவத்தில் திரு. குணபால் தொடர்ந்து பேசுகையில்; ‘‘இணக்க மன்றுகள் மூலம் மக்களது பிரச்சனைகளுக்குத் தகுந்த நிவாரணம்அளிக்கப்படும். கடந்த காலங்களில் அரசு நீதிமன்றங்களில் நடந்ததுபோல செல்வாக்கு, லஞ்ச ஊழல்களில் யாராவது ஈடுபட்டால் மக்களாகிய நீங்கள் அவர்களை உடன் இனம்கண்டு எமக்கு அறியத்தர வேண்டும்’ என்றார்.

இவ்வைபவத்தில் மேற்படி பிரதேச உதவிப் பொறுப்பாளர் திரு. கந்தையா பேசுகையில்: ‘‘இணக்க மன்றுகளில் சமர்ப்பிக்கப்படும் பிரச்சனைகள் அனைத்தும் தேசவழமைச் சட்டம், றோமன் டச்சுச் சட்டம், முஸ்லிம் மக்கள் தொடர்பான சட்டங்களை அனுசரித்துத் தீர்க்கப்படும்’’ என்றார். (55)

# மோட்டார் சைக்கிள் விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ் குடாநாட்டில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில்படுகாயமடைந்தவர்களின் மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். பஸ் நிலையம் முன்பாக இடம்பெற்ற விபத்தில் பூநகரி செட்டிக்குறிச்சியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சபாரட்ணம் (வயது 50) என்பவர் படுகாயமடைந்தார்.

அரியாலையில் இடம்பெற்ற விபத்தில் அவ்வூரைச்சேர்ந்த தனலஷ்மி காசிப்பிள்ளை வயது 24) என்ற இளம்பெண் படுகாயமடைந்தார்.

பலாலியில் இடம்பெற்ற விபத்தில் பலாலியைச்சேர்ந்த பேரின்பநாதன் இருதயநாதன் (வயது 46) என்பவர் படுகாயமடைந்தார். (56)

# ஐ. நா. உலக சுற்றுடல் தினம்

(யாழ்ப்பாணம்)
ஐக்கிய நாடுகள் சங்கதேசிய பணிப்பாளர் சபை உறுப்பினரும், யாழ், பிரிவு தலைவருமான கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் ஐ நா. உலக சுற்றுடல் தினம் தொடர்பாக விடுத்துள்ள செய்தி;

‘‘ஐக்கிய நாடுகள் உலக சுற்றுடல் தினம் இன்று ஜூன் 5ம் திகதி) உலகின் எல்லாப்பாகங்களிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வருடக் கொண்டாட்டங்களில் சிறுவர்களும், சுற்றுடலும் என்பது மிக முக்கியத்துவம் பெறுகிறது.

ஐக்கிய நாடுகள் சுற்றுடல் திட்டம் (யு. என். இ பி.) இத்தினத்தை மெக்ஸிக்கோ நகரில் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. அத்துடன் சுற்றுடல் பாதுகாப்பிற்கும், அதனை அபிவிருத்தி செய்வதிலும் கணிசமான பங்களிப்புச் செய்த 500 ஸ்தாபனங்களும் தனி நபர்களும் இன்று மெக்சிக்கோ நகரில் ஐக்கிய நாடுகளினுல் கௌரவிக்கப்படுகின்றனர். இலங்கையில் இருந்தும் இக்கௌரவத்தை ஒரு பத்திரிகையாளர் பெறுவது ஒரு சிறப்பம்சமாகும்.

‘‘இத்தினத்தைச் சிறப்புற அனுஷ்டிக்கும்படி ஐக்கியநாடுகள் சுற்றுடல் திட்டம் அரசாங்கங்களையும், அரச சார்பற்ற ஸ்தாபனங்களையும், மற்றும் சமூக ஸ்தாபனங்கள், குழுக்கள் ஆகியவற்றையும் இத்தினத்தை அனுஷ்டிக்க சுற்றுடல் தொடர்பான மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்வண்ணம்வேண்டுகோள் விடுத்துள்ளது.’’

# கிராமங்களில் சிறு நூலகங்கள்

[வடுக்கோட்டை]
அறவழிப் போராட்டக்குழு யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமங்கள்தோறும், சிறுநூலகங்களை அமைக்கத் தீர்மானித்துள்ளது.

பின்தங்கிய கிராமங்களில் உள்ள சிறுவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த சிறு நூலகங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதுவரை 6 சிறுநூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறவழிப்போராட்டக்குழுச் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் தெரிவித்தார். (139)

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி:

# பங்குபற்ற தகுதிவாய்ந்த நாடுகளின் விபரம்

இம்மாதம் 8ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் 14வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு கடந்த 19 மாதங்களாக 112 நாடுகளிடையே 313 போட்டிகள் நடத்தப்பட்டு ஆர்ஜன்ரீனு, இத்தாலி இவற்றைத் தவிர 22 நாடுகள் தெரிவுசெய்யப்பட்டன. இவற்றில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய ஆறு நாடுகளைப் பற்றி இதுவரை தெரிந்து கொண்டோம். மற்றைய 18 நாடுகளைப்பற்றிய விபரங்களை மிகச் சுருக்கமாகத் தருகின்றேன்.

## றுமேனியா

றுமேனியாவின் உதைபந்தாட்டச் சங்கம் 1930ம்ஆண்டு உதயமானது. 1934, 1938, 1970ம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடத் தகுதிபெற்றது. தற்போதைய இக்கோஷ்டியின் பயிற்சியாளர் திரு. எமறிஸ் ஜேனேயின் கடும் பயிற்சியால் றுமேனியாக் கோஷ்டி ஐரோப்பிய நாடுகளிடையே நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாக விளையாடியது.

இக்கோஷ்டியில் கொல்ஸி ஹுஜி, ஜேடியன் ஹனட்டல், மைக்கல் கிளின், ஸ்ரீபன் ஜேரூன் போன்ற உலகப் புகழ் வீரர்கள் இருக்கிறார்கள்.

இக்கோஷ்டி இதுவரை 8 முதற்தர உலகப் போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 5 போட்டிகளில் தோல்வியடைந்து, ஒரு போட்டியைச் சமனுககி, 5 புள்ளிகளை மட்டுமே பெற்றுள்ளது.

## சுவீடன்

சுவீடன் உதைபந்தாட்டச் சங்கம் 1904ம் ஆண்டு உதயமானது. இது உலகக் கிண்ணப் போட்டியில் 1958ம் ஆண்டு 2ம் இடத்தையும், 1950ம் ஆண்டு 3ம் இடத்தையும், 1938ம் ஆண்டு 4ம் இடத்தையும்பெற்றது. 1934, 1970, 1974, 1978ம் ஆண்டுகளில் உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதிபெற்றது.

(11)

இக்கோஷ்டியில் தற்போது கிளன் ஹெய்சன், மட்மைக் நட்சன், ஜோன்வி, கிளஸ் இன் ஐசன் போன்ற உலகப் புகழ் வீரர்கள் இருக்கிறார்கள். இதுவரை இக்கோஷ்டி உலக முதற்தர 28 ஆட்டங்களில் பங்குபற்றி 11 போட்டிகளில் வெற்றிபெற்று, 11 போட்டிகளில் தோல்வியடைந்து, 6 போட்டிகளைச் சமனுக்கி, 28 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

## சோவியத் யூனியன்

ரஷ்ய நாட்டின் உதைபந்தாட்டக் கோஷ்டியை உலகில் யாரும் எடைபோடமுடியாது. இக்கோஷ்டி உலகின் எந்த நாட்டின் கோஷ்டிகளுக்கும் சளைக்காமல் சவால்விடக் கூடியது. ஆகவே ரஷ்ய கோஷ்டியை ஐரோப்பிய நாட்டுக் கோஷ்டி என்பதா? அல்லது ஆசிய நாட்டுக் கோஷ்டி என்பதா? ஆனுல் உலக அரங்கில் இதனை ஐரோப்பிய நாட்டுக் கோஷ்டி என்றே கணிக்கப்படுகிறது. இவ்வளவு வல்லமை படைத்த ரஷ்யக் கோஷ்டி இதுவரை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாமல் போனது அதன் துரதிர்ஷ்டவசமே எனக் கூறலாம்.

நமது விளையாட்டு நிருபர்
'தேவா'

கடந்த ஒலிம்பிக் போட்டியில் ரஷ்யா உதைபந்தாட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், ஐரோப்பிய நாடுகளிடையே நடைபெற்ற போட்டியில் பிரமிக்கத்தக்க சாதனையையும் ஏற்படுத்தியது.

இத்தாலியில் இம்முறை நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் ஜூன் 13ம் திகதி ரஷ்ய - ஆர்ஜன்ரீனு கோஷ்டிகளிடையே நடைபெறும் போட்டி ஒரு பலப்பரீட்சையாகவே அமையக்கூடுமென உலகம் முழுவதும் எதிர்பார்க்கின்றது.




ரஷ்யா இதுவரை 28 உலக முதல்தரப் போட்டிகளில் பங்குபற்றி 16 போட்டிகளில் வெற்றிபெற்று, 8 போட்டிகளில் தோல்வியடைந்து, 6 போட்டிகளை சமனுக்கி 39 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இம்முறை உலக கிண்ணப் போட்டியில் ரஷ்யா ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தலாம் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

1966ம் ஆண்டு நடைபெற்ற உலக கிண்ணப் போட்டியில், ரஷ்யா 6வது இடத்தையும், 1958, 1962, 1970, 1982, 1986ம் ஆண்டுகளின் உலகப் போட்டியில் விளையாடுவதற்கும் தகுதிபெற்றது.

## ஒஸ்றியா

ஒஸ்றியாவில், உதைபந்தாட்டச்சங்கம் 1905ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. உலக கிண்ணப்போட்டியில், 1934ம் ஆண்டு 4ம் இடத்தையும், 1954ம் ஆண்டு 3ம் இடத்தையும் பெற்றது. 1958, 1978, 1982ம் ஆண்டுகளில் உலக கிண்ணப்போட்டிக்கு விளையாடத் தகுதி பெற்றது.

''எமது கோஷ்டி ஒரு பலம் கொண்ட கோஷ்டி என்பதை

(8-ம் பக்கம் பார்க்க)

# தேசிய இளைஞர் சேவைமன்ற மாவட்ட போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற கழகங்களுக்கிடையிலான மாவட்ட விளையாட்டுப்போட்டிகள் இம்மாதம் 7ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு வெபர் அரங்கில் இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலர் திரு. வீ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இப் போட்டிகளில் பிரதமவிருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்குப் பிராந்திய உதவிப் பணிப்பாளர் திரு. பீ. டி. நிமல்தர்மஸ்ரீ மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. இ. யோகநாதன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் மேற்படி மாவட்ட விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டிகளில் 1ம் இடங்களைப் பெறுவோர் கிழக்குப் பிராந்திய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவர். (121)

# பயிலுநர் ஆசிரியர் நியமனம்:
## மறுபரிசிலனை நேற்று ஆரம்பம்

[உடுவில்]

அண்மையில் நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களின் நியமனங்கள் மறுபரிசீலனை செய்யப்படவுள்ளன.

இதற்கான வேலைகள் அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் நேற்று ஆரம்பமாகின.

பயிலுநர் ஆசிரியர்கள் விண்ணப்பித்தபோது குறிப்பிட்ட பாடங்களுக்கு மாறாக பல ஆசிரியர்கள் வேறு பாடங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டு நியமனம் வழங்கப்பட்டதால் பாடசாலைகளில் அந்தந்த ஆசிரியர்கள் நியமன பயிற்சிப் பாடத்தை சரியாக கற்பிக்க முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

அதிபர்களும் உரிய பாடத்துக்குரிய ஆசிரியர்களை தராது வேறு பாட ஆசிரியர்களை நியமித்து அனுப்பியமையால் நேரசூசியையோ. பாடத்தையோ வழங்கமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு பொருத்தமான பாடங்களை அவ்வாசிரியர்களுக்கு வழங்கி உரிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்து கல்விச் சீர்திருத்தத்தை நிலைநிறுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு பாடசாலையிலும் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களின் பெயர், எந்தப் பாடத்துக்காக அவர் நியமனம் பெற்றுள்ளார். அந்தப் பாடத்தை கற்பிப்பதில் அவருக்கு ஆற்றல் உண்டா? இல்லையாயின் அவர் எந்தத் துறைக்குப் பொருத்தமானவர் என்ற விபரங்களை தெரிவிக்குமாறு பாடசாலை அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர். (109)

# இப்படியும் நடக்கிறது

தமிழ்நாடு தஞ்சாவூரைச் சேர்ந்த திரு. செல்வராஜ் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது வடபகுதிக்கும் வந்திருந்தார். பல்வேறு இடங்களையும் பார்வையிட்டார்.

இவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் சில தினங்களுக்கு முன்னர் மன்னாரில் கிடைத்தது.

பல்வேறு விஷயங்கள் குறித்தும் 'சீரியஸாக' பேசிக் கொண்டிருந்த அவர் ஒரு கட்டத்தில்; இந்தியாவில் இருந்தபோது; இந்திய அமைதிப்படையினருக்காக இந்திய வானொலி ஒலிபரப்பிய 'வெற்றி மாலை', 'அன்பு வழி' ஆகிய நிகழ்ச்சிகளை கேட்டபோது... ... உண்மையிலேயே அகமகிழ்ந்தேன். இந்திய அமைதிப்படை உண்மையிலேயே தமிழ் மக்களுக்கு நல்ல பணியாற்றுகிறது என்றுதான் நம்பினேம். இத்தனையும் படுபொய்; இந்திய அரசின் கயிறுதிரிப்பு என்பது இங்குவந்த பின்னர்தான் உணரக்கூடியதாக இருந்தது. இங்கு வந்தது அமைதிப்படை அல்ல; அழிவுப்படை! தமிழ்மக்களுக்கு பல இழப்புகளையும் உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தி சின்னபின்னமாக்கிய அநாகரிகப்படைதான் அந்த இந்திய அமைதிப்படை......!'' என்று பொரிந்து தள்ளினர்

விட்டாரா அவர்? அவர் கடைசியில் அழுத்தமாகச் சொன்ன அந்த வார்த்தைகள்... 'இனிமேல் இந்திய வானெலிச்செய்திகளை கேட்கவும் மாட்டோம்; இந்திய அரசின் கூற்றை நம்பவும் மாட்டோம்...! (தகவல்: நமது மன்னார் நிருபர்)

தமிழகத்து ஒவ்வொரு மக்களின் கருத்துக்கும் இது சமர்ப்பணம்!

'ஊடுருவி'

திறந்த பல்கலைக்கழகம்

# புடவை தொழில் நுட்பவியல் கற்கை நெறி

விண்ணப்பம் கோரப்படுகின்றது

[உடுவில்]

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் புடவைத்தொழில் நுட்பவியல் சான்றிதழ் கற்கை நெறிக்கு ஆட்களைத் திரட்டுவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நூல உற்பத்தி, நெசவு, இரசாயன செய்முறை, உடுபுடவைத் தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளில் மேற்படி பயிற்சிநெறிக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

ஜூலை மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் ஏற்கனவே தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இப்பாடத்திட்டம் உகந்தது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# "பனம்பொருள்களுக்கு கைகொடுப்போம்"

(மட்டுவில்)

''கேட்டதெல்லாம் கொடுக்கும் கற்பகதரு ஒன்று தேவலோகத்தில் இருப்பதாக புராணங்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். கண்ணால் பார்த்ததில்லை. ஆனுல் இந்த மண்ணுலகில் அப்படியொரு கண் கண்ட கற்பகதரு உண்டென்றால் அது கண்டிப்பாகப் பனை மரம் ஒன்றுதான். அந்த உண்மையை நமது தமிழ் மக்கள் அறிந்து கொள்ளக் காலம் கடந்து விட்டாலும் கூட, எமது தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அதை உணர்ந்துகொண்டு அதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது மகிழ்ச்சிக்குரியது.''

இவ்வாறு சாவகச்சேரி நகர் சிற்றூரவைத் தலைவர்: பிரம்மஸ்ரீ எஸ். சர்மா கூறினார்.

சாவகச்சேரி நவீன சந்தை மத்தியில் வீர மரணம் அடைந்த வீர வேங்கை ரஞ்சித் நினைவாக பனம்பொருள் உற்பத்தி உணவுப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வீர வேங்கை கப்டன் ரெஜியின் தாயார் சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார். பிரம்மஸ்ரீ சர்மா தனது தலைமை உரையில் மேலும் கூறியதாவது; ''அந்நியநாகரிகம், அந்நிய நாட்டுப் பொருட்கள் போன்ற ஒரு மாயை எமது நாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கியதோடு எமது உள்ளூர் உற்பத்திப் பொருள்களுடன் எமது பனம் பொருள்களையும் மக்கள் மறந்துவிட்டனர். இப் பொருள்களைப் பாவிப்பது நாகரிகக் குறைவெனக் கருதி விட்டனர். ஒரு வேளை இலவச அரிசியும், மாவும் இருக்கும்போது நமக்கென்ன குறை என்று உணவு முத்திரைகளை பேணுமளவிற்கு, பனம் பொருட்களைப் பேண மறந்து விட்டனர். உள்ளூர் உற்பத்திகளைக்கூட அலட்சியம் செய்து விட்டனர். ஆனுல் காலம் மாறியது. மா, அரிசி, சீனி தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்த நேரத்தில் எம்மைப் பார்த்துக் கைகொட்டிச்சிரிக்க வேண்டிய பனை எம்மைக் கைவிடவில்லை. இதை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது. (82)

# வழிபடுவோர் சங்க நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனேன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஆலய முன்றலில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் நடைபெற்றது. பெருந் தொகையான அடியவர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் ஆலய வளர்ச்சி பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டு நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. பத்மநாதன், உப தலைவர்கள்: சி. பரமநாதன், செ. இராசேந்திரன், இணைச் செயலாளர்: வீ. இ. ரத்தினசிங்கம், சி. மாதவகுமரன், பொருளாளர்: ஆ. ச. பரந்தாமன் இணைப் பொருளாளர்: இ. சிங்காரவேல், ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை—

# சில தினங்களில் மீண்டும் இயங்க ஆரம்பிக்கும்!

(கொழும்பு)

கடந்த ஆறு வருடங்களாக மூடப்பட்டிருந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் உற்பத்தி வேலைகள் இன்னும் சில தினங்களில் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

தொழிற் சாலையிலுள்ள இயந்திர உபகரணங்கள் தற்பொழுது சீரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சரவைக்கு யோசனை தெரிவித்திருந்தார்.

கூட்டுத்தாபனத் தலைவர் திரு, உபாலி சில்வா தகவல் தருகையில், இன்னும் இரண்டு வாரங்களில் குளோரின் உற்பத்தி ஆரம்பமாகும்.

இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் குளோரின் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாகும். நாளாந்தம் ஐந்து மெட்ரிக் தொன் குளோரினை பரந்தன் தொழிற்சாலையில் உற்பத்தி செய்ய முடியும்.

இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் கோஸ்டிக் சோடா மற்றும் இரசாயனப் பொருட்களின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

# இந்திய கடற்றொழிலாளர் சிறைபிடிப்பு?

(சென்னை)

ஐந்து இந்திய மீன்பிடி படகுகளிலிருந்த சுமார் முப்பது கடற் தொழிலாளர்கள் இலங்கையில் சிறைபிடிக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றதென்று இந்திய வானொலி தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தின் விபரங்களை கொழும்பில் இந்தியத் தூதரகம் இலங்கை அரசிடம் விசாரித்து வருகிறது.

சிறைபிடிக்கப்பட்ட கடற் தொழிலாளர்கள் யாழ்ப்பாணத் தீபகத்துக்கு அப்பாலுள்ள ஒரு தீவுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாக இலங்கை வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

## படகு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படகுகளின் உரிமையாளர்களை படகுகளுடன் குறிக்கட்டுவான் துறைமுகத்துக்கு எதிர்வரும் 7-ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். (153)

# மேஜர் முரளி ஞாபகார்த்த புதிர் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடாத்திய யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்டத்திலான புதிர்போட்டிகளின் முதலாம் சுற்று 2-6-90 சனிக்கிழமை அன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம், மருதனார்மடக் கோட்டம் ஆகியவற்றில் நடைபெற்ற போட்டிகளில் வேம்படி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, சன்மார்க்க மகாவித்தியாலயம், கதீஜா மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி, யூனியன் கல்லூரி, இளவாலை கொன்வென்ற், மல்லாகம் மகாவித்தியாலயம், மகாஜனக் கல்லூரி, வீமன் காமம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, அச்சுவேலி மகாவித்தியாலயம், அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இரண்டாம் சுற்றுப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இம் மூன்று கோட்டங்களிலும் நடைபெற்ற போட்டிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளது. இப்போட்டிகளில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியைச்சேர்ந்த தி. கேசவன் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இரண்டாம் சுற்றுப்போட்டி எதிர்வரும் 7ம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

## கடத்தல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரிடம்கடற்படையினரால்மேற்படி பொருட்களும் படகும் ஐவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறை சுங்கப் பகுதியினரின் விசாரணையைத் தொடர்ந்து பொருட்களும், படகும் பறிமுதல் செய்யப்பட்டன. ஐந்து பேரில் மூவர் பிணையில் ஆளுக்கு தலா ஐயாயிரம் ரூபா பிணையில்விடப்பட்டனர். இருவர் தாங்கள் அகதி என்று கூறியதைத் தொடர்ந்து எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டனர். ஐந்து பேரும் யாழ். குடாநாட்டு வாசிகள் ஆவர். (153)

## உலகக் கிண்ண

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில், ஐரோப்பிய நாடுகளிடையே நடைபெற்ற போட்டியில் 2ம் இடத்தைப் பெற்று நிரூபித்துள்ளோம் என இக்கோஷ்டியின் பயிற்சியாளர் திரு யோசெல் கிகெஸ் பேக்கர் கூறியுள்ளார். ஒஸ்றியாக் கோஷ்டியில் றொம் பொல்ஸ்ரர், பீற்றர் அர்த்னர், அன்ரன் பெவ்வர். மன்பிறட் ஸ்சாக் போன்ற உலகப்புகழ் வீரர்கள் அங்கம் வகிக்கின்றூர்கள்.

இக்கோஷ்டி 23 உலக முதல் தரப் போட்டிகளில் இதுவரை கலந்துகொண்டு 11 போட்டிகளில் வெற்றி பெற்று, 10 போட்டிகளில் தோல்வியடைந்து 2 போட்டிகளை சமனுக்கி 24 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

# உணவு முத்திரை

(அச்சுவேலி)

5-வது உணவு முத்திரைத் தொடரில் முதலாவது இலக்க உணவு முத்திரைக்கான உணவுப் பொருட்களை இம் மாதம் 8-ம் திகதிவரை பொது மக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

## மீண்டும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் என்று உத்தேசித்தேன். ஆயினும் அதை திருத்தியமைக்க இரண்டுமாத காலங்கள் செல்லும் என்ற காரணத்தால் இதனை தற்போதைக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தவுள்ளேன்.

யாழ். மாநகராட்சிமன்றம் கடந்த காலங்களில் மாதாந்த பௌர்ணமிக் கலை விழாவை நடாத்தி வந்துள்ளது. இது முக்கிய நிகழ்ச்சியாகவும் இருந்தது என்ருர். (153)

## இலங்கை வங்கியில் இன்று

(யாழ்ப்பாணம்)

உலக சூழல் சுற்ருடல் பாதுகாப்புத் தினம் இலங்கை வங்கியிலும் இன்று கொண்டாடப்படும்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியில் இன்றுகாலை எட்டு மணிக்கு நடைபெறும் மேற்படி வைபவத்தில், சிறப்பு நிகழ்ச்சியாக மரம் நாட்டும் வைபவம் இடம் பெறும்.

## யாழ். மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் ஆலோசனை வழங்க உள்ளார் என்று தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அரசுக்குச் சொந்தமான 700 ஏக்கர் காணி, பொதுமக்களுக்குக் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் உப உணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்படவிருக்கிறது.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 150 ஏக்கர் காணி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 166 ஏக்கர் காணி, பொதுமக்களுக்கு வீடு அமைக்கவும், உப உணவுப் பயிர்ச் செய்கைக்காகவும் வழங்கப்பட உள்ளது.

அத்துடன் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அரசுக்குச் சொந்தமான காணிகளும் உப உணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்படவிருக்கிறது. (153)

## தமிழீழத்தில்

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

லாளர் திரு யோகரட்ணம் யோகி நேற்று பி. பி. சி கொழும்பு முகவர் கிறிஸ் மொரிஸூக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

அரசோடு நடந்த பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றங்கள் ஏறபட்டுள்ளன. அரசாங்கத்துக்கு எமது நிலைப்பாடுபற்றி விளக்கிளுேம், என்ருர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## பொதுக் கூட்டம்

காலம்: 7- 6- 90 (வியாழன்)
காலை 9-30 மணி.

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
குமாரசாமி மண்டபம்.

யாழ். மாவட்டத்தில் உள்ள இதுவரை பதிவுசெய்த தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும், பிரத்தியேக வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களும் தவருது சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். (சி-3938)

## யாழ். பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களுக்கும், பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்திற்கும் மேற்கொண்ட விஜயத்தின்போது இத்திட்டம் உருவாக்கப்பட்டது. (153)

## மட்டுநகர்

(1ம பக்கத் தொடர்ச்சி)

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'அந்தப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட தளபதி கருணு, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன், நியூற்றன், மகான் ஆகியோர் பங்கு பற்றினர்.

அரசாங்கக் காப்பில் வடகிழக்கு சமாதானக் குழுத் தலைவர் ஐ. ஹமீத், வடகிழக்கு பிராந்திய இராணுவ தளபதி ஜெனரல் ஸ்ரான்லி சில்வா, வடகிழக்கு பொலிஸ் பிரதி அத்தியட்சகர் ஆனந்தராசா, மற்றும் மட்டகளப்பு [illegible] இராணுவ அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகள், விமானப்படை அதிகாரிகள் ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தப் பாதுகாப்பு மாநாடு அடுத்ததாக திருகோணமலையில் நடைபெற இருக்கிறது. ஒவ்வொரு வாரமும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை ஆராய இருக்கிருர்கள்'' என்றும் சொன்ஞர். (152)

## வடக்கு - கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி

''அந்த மசோதாவை என்ன உருவில் கொண்டுவர இருக்கிருர்களோ அது பற்றித் தெரியவில்லை.

''என்னவாக இருந்தாலும் விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்குபற்ற வேண்டுமாளுல் அரசியலமைப்பின் 6வது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டே ஆகவேண்டும். இந்த மசோதா பற்றி அரசாங்கம் அமைச்சரவையிலும், பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் விளக்க இருக்கிறது.

''இந்த 6வது திருத்தச் சட்ட நீக்கம் சம்பந்தமாக ஈரோஸ் தனிப் பிரேரணையாகக் கொண்டுவர இருந்ததை நிறுத்தி, அரசாங்கமே பாராளுமன்றத்துக்கு இதனைச் சமர்ப்பிக்க இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.''

## புலிகளோடு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் கூறியதாவது; 'வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இலங்கை இராணுவம் யுத்த முஸ்தீபு செய்து வருகின்றது. இலங்கை இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன என்று விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட சந்தேகங்களுக்கு மேற்கண்டவாறு அரசாங்க தரப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டது என்ருர். (152)

## கண்டிக்காடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தூர் கிழக்கு தகரம்பிள்ளையார் கோயில் முன்றலில் இன்று நடைபெறும் 'படுகொலை நினைவு'' பொதுக் கூட்டம் வலிகாமம் பொறுப்பாளர் திரு. இ. ஆஞ்சநேயர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்னம் யோகி மற்றும் முன்னணிப் பேச்சாளர்கள் திரு. காசி ஆனந்தன், மகளிர் முன்னணித்தலைவிகள் ஜெயா, மாலினி உட்பட பல பிரமுகர்கள்உரையாற்றவுள்ளனர். (74)

## மரண அறிவித்தல்

### தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்து

சில்லாலை தெற்கைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை இயக்கோமுத்து காலமானுர். இவர் ஞானம்மாவின் அன்புக் கணவரும், ஹென்றி யோசப் (புகையிரதநிலைய அதிபர், லண்டன்), புவிராசசிங்கம் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், பிரதேசபை, முல்லைத்தீவு), ஜே. ஏ. இராஜநாயகம் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர் வழங்கல், வடிகால் சபை, யாழ்ப்பாணம்), பீற்றர் கனியூட் (சுவிற்சலாந்து), அருளானந்தம் (சுவிற்சலாந்து), டெய்சி, காலஞ்சென்ற பற்றிக் இம்மனுவேல், யோன் பொஸ்கோ (பொறியியல் வளாகம், பேராதனை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சம்சுல் ஹிதாயா (இங்கிலாந்து), காலஞ்சென்ற மேரி பற்றிமா, யோகறஞ்சனி (உரிமையாளர், பிரபாகர் பார்மசி, முல்லைத்தீவு), விவியன், இமெல்டா (சுவிற்சலாந்து), இந்திரா (சுவிற்சலாந்து), எல். ஜீவரட்ணம் (கிராம அபிவிருத்தி அதிகாரி, சாவகச்சேரி) ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னுரின் நல்லடக்கம் (6-6-90) புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சில்லாலையில் நடைபெறும்.

தகவல்: குடும்ப அங்கத்தினர்கள்.

'டெய்சி மஹால்',
சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு, (3937)